1987 ஏப்ரல் 29]

அளவுக்கு அங்கே யாத்திரீகர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் அங்கே மக்கள் தங்குவதற்கு சிறிய இடம்கூட இல்லாமல் இருக்கிறது. மலைக்குச் செல்லும் சாலை வசதி மிகவும் மோசமாக இருக்கிறது. இவற்றை எல்லாம் கருத்திலே கொண்டு, மக்கள் தங்குவதற்கு வசதி செய்யவும், சாலையை உடனடியாகப் போடவும் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறை ஒதுக்கிய ரூ. 2 இலட்சத்தோடு அந்த மாவட்டத்திலுள்ள போக்குவரத்துத்துறை ரூ. 3 இலட்சம் கொடுப்பதாக ஒப்புதல் அளித்துள்ளது. ஏற்கனவே சொல்லப்பட்ட ரூ. 14.90 இலட்சம் மதிப்பீட்டில் ஓய்வு விடுதி, உணவு விடுதி, உடை மாற்றும் அறைகள் கட்டப்படும். சாலை மேம்பாட்டுக்கு ரூ. 4.50 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது பணிகள் துவக்கப்படுகிறபோது, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லும் வசதிகள் எல்லாம் கவனிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளைத் திரும்ப அழைக்க உரிமை அளிக்கும் சட்டம்.

திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நேற்றைக்கு உள்ளாட்சித் துறை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கையின்மீது சட்டசபையில் விவாதம் நடைபெற்ற நேரத்தில், அந்த இலாக்கா சம்பந்தப்பட்ட அமைச்சரவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். உங்களது அனுமதியோடு அதைப் படிக்க விரும்புகிறேன். உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதிநிதிகள் தவறு செய்தால், அவர்களை

. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகை இல்லாமல் சொல்லுங்கள்.

திரு. பி. மனோகரன்: அவர்கள் தவறு செய்தால், அந்தப் பகுதி மக்களின் விருப்பத்திற்கு மாறாக நடந்துகொண்டால், அவர்களைத் திருப்பி அழைக்கும் உரிமை ஒன்றியத்தைச் சார்ந்த மக்களுக்கு, நகராட்சியைச் சார்ந்த மக்களுக்கு உண்டு என்ற அளவுக்கு ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதாக இங்கே தெரிவித்திருக்கிறார்கள். நூற்றுக்கு நூறு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அதே நேரத்தில் நான் தெரிந்துகொள்ள விரும்புவது, தவறு செய்கின்ற தொகுதிவாழ் மக்களின் கோரிக்கைகளைப் புறக்கணிக்கின்ற, அருவருக்கத்தக்க முறையில் செயல்படுகின்ற, ஜனநாயகத்திற்கு மாறாக நடந்து கொள்கின்ற தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களை அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களைத் திருப்பி அழைக்கின்ற உரிமையை அந்த மக்களுக்குத் தரத்தக்க வகையில், "Right to Recall" என்பதை இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்துவதன் மூலம் கொண்டுவர இந்த அரசு முற்படுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் கொள்கைத் திட்டத்தை வகுத்தவர்களில் நான் முன்னணியில் நின்றவன் என்ற முறையில் தெரிவித்துக் கொள்கிறேன். "Right to Recall" என்பது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தாலே ஒப்புக்கொள்ளப்பட்ட லட்சியம். நாடாளுமன்ற உறுப்பினர்களை, சட்டமன்ற உறுப்பினர்களை 'ரிகால்' செய்வது என்பது பற்றியது. அதைச் செய்வதற்கு இந்த ஆட்சி முன் வருமா? அப்படி முன்வராவிட்டால், இப்போது இங்கே கொண்டு வருவது காழ்ப்புணர்ச்சியின் அடிப்படையிலே என்றுதான் கருத வேண்டியிருக்கும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதில் பார்லிமெண்டிலே கேட்க வேண்டும். நாம் அரசியல் சட்டத்தைத் திருத்த முடியாது. பாராளுமன்ற உறுப்பினர்களை, சட்டமன்ற உறுப்பினர்களைப் பதவி நீக்கம் செய்ய வேண்டுமானால், திருப்பி அழைப்பது "Right to Recall" என்ற முறையில் செய்ய, அரசியல் சட்டம் பாராளுமன்றத்திலே திருத்திய பிறகுதான் அமலுக்கு வரும். (குறுக்கீடு). அதை நாம் இங்கே திருத்துகொண்டு

ஒன்றும் செய்வதற்கில்லை. அதை அங்கே கொண்டுவரச் சொல்லுங்கள். உங்கள் கட்சி சார்பிலே பேசி கொண்டு வரச் சொல்லுங்கள். "Ratification- -க்கு வரட்டும் பார்த்துக் கொள்வோம்.

திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை என்ற அளவில் நான் இதைச் சொல்கிறேனே தவிர, வேறல்ல. நான் இங்கே சொல்கின்ற காரணத்தினால், அங்கு ஆளுங்கட்சியாக பணியாற்றிக் கொண்டிருக்கின்ற காங்கிரஸ் கட்சியே அதைச் செய்யச் சொல்ல இந்த அரசு முன்வருமா? நான் அவை முன்னவர் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அவர் பதில் சொல்லத் தயாராக இருக்கும்போது . . .

3. விதி 111-ன்கீழ் அமைச்சரின் திருத்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 111-ன் கீழ் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையை அவைக்கு அளிப்பார்கள்.

*மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11—4—1987 அன்று காலை சட்டமன்ற உறுப்பினர் திரு. கு. தமிழரசன் அவர்கள் சிதம்பரம் நந்தனார் கல்விக் கழகத்தின் நிர்வாகம் குறித்து, சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. எஸ். ஜெயச்சந்திரன் அவர்கள் என்னிடம் கேட்டிருந்த ஒரு கேள்விக்கு ஓர் ஆண்டுக் காலமாக அத்துறைச் செயலரிடமிருந்து அமைச்சருக்குப் பதில் வராமல் இருக்கிறதென்றும், ஒரு முக்கியப் பிரச்சினை குறித்து எழுப்பப்பட்ட வினாவிற்கு ஓர் ஆண்டுக்காலமாக சம்பந்தப்பட்ட சமூக நலத்துறையிலிருந்து பதில் வராமல் இருப்பது உறுப்பினர்கள் உரிமையை மிகவும் பாதிக்கிறது என்றும் குறிப்பிட்டபொழுது, நான் அந்தக் கேள்வி ஆதிதிராவிடர் நலத் துறையும் வருவாய்த் துறையும் சம்பந்தப்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டேன். தற்போது சமூக நலத்துறைச் செயலரிடம் இதுபற்றிக் கலந்தாலோசித்தபொழுது உறுப்பினர் குறிப்பிட்ட கேள்வி சிதம்பரம் நந்தனார் கல்விக் கழகத்தின் பொறுப்பில் உள்ளவர்களால் பணம் கையாடல் செய்யப்பட்டது உண்மையா என்பது பற்றியதாகும்; எனவே, இக் கேள்வி 1—7—1985 அன்று சமூக நலத்துறையால் பெறப்பட்டு அவ்வினாவில் குறிப்பிட்டுள்ள பொருள் சமூக நலத்துறையைச் சார்ந்ததாக இல்லாததாலும், வணிகவரி மற்றும் அறநிலையத்